**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.205/2024

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பிரமணியன் |
| Father's Name | : | ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.10.2025.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 09.06.2008 வாதியின் செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 22.04.2021 தேதியில் எனதுபெயரிலுள்ள நத்தம் நிலவரி துாய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணத்தின் விஸ்தீரணம் மற்றும் உட்பிரிவு இல்லை என பிரதிவாதி தரப்பில் ஆட்சேனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனையானது வழக்கின் இறுதி விசாரணையின் போது முடிவு செய்யப்படும்)

3. 26.02.2020 வாதி கட்டிடம் கட்ட வாங்கிய அனுமதி வரைபடம் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 08.03.2021 வாதி பெயரில் உள்ள வீட்டுதீர்வை ரசீதுகள் அசல் (எண்ணம்–2) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 30.01.2020 வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலகநகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. மாதிரி வரைபடம் அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. தபசில்சொத்திற்கான புகைப்படம் 65(பி) சர்டிப்பிக்கேட்டுடன் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி புகைப்படங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.